/

சுருக்கம்

பணியமைப்பு – கருவூலக் கணக்குத் துறை – திரு.R.கிருஷ்ணராஜ், இளநிலை உதவியாளர், செங்கல்பட்டு மாவட்ட கருவூல அலகிற்குட்பட்ட சார்கருவூலம், திருப்போரூர் அலுவலகம் – கருணை அடிப்படையில் 25.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**நிதி (கருவூலக் கணக்கு – 2)த் துறை**

**அரசாணை (3ப) எண்.61**

**நாள். 25.10.2023**
**சோபகிருது, ஐப்பசி–8,**
**திருவள்ளுவர் ஆண்டு –2054.**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே.வா.(க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
2. மாவட்ட கருவூல அலுவலர், செங்கல்பட்டு அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.62/2022/ஏ1, நாள்.21.01.2022.
3. கருவூல கணக்கு ஆணையரின் கடித ந.க.எண்.4637/2023/சி1, நாள்.21.03.2023.

*******

2/11/2023

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டக் கருவூல அலகில், சார்நிலைக் கருவூலம், மதுராந்தகம் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.S.ராமலிங்கம் என்பவர் 25.05.2019 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமான திரு.R.கிருஷ்ணராஜ் என்பவர் கருணை அடிப்படையில் கருவூல மற்றும் கணக்குத் துறையில் செங்கல்பட்டு மாவட்ட கருவூல அலகிற்குட்பட்ட சார்கருவூலம், திருப்போரூர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு, 25.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், தனியரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழினை அளித்துள்ளார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான தகுதியை தனியர் பெற்றுள்ளார் என்றும், தெரிவித்துள்ளார். அவரது பணியினை 25.01.2022 முற்பகல் முதல் -

//த.பி.பா//

Scanned with ACE Scanner